பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 18 வியாழக்கிழமை 01.02.2024 அதிர்வு 185

## 25 நாள்களுக்குள் 1,189 விபத்துக்கள்

### 136 பேர் பரிதாபச் சாவு

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஜனவரி 25ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் ஆயிரத்து 189 வாகன விபத்துக்கள் 04▶




# அமைச்சர் கெஹலியவுக்கு

# வெளிநாடு செல்லத் தடை



## சி.ஐ.டியில் ஆஜராகுமாறும்

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்க முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவை நாளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 04▶




## கிளிநொச்சியில் விபத்தில் சிக்கிய இளைஞர் மரணம்

கிளிநொச்சியில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பகுதியைச் சேர்ந்த மகதீஸ் அபிசாகன் (வயது 20) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார். 04▶

## நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



ஜனவரி மாதம் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை (இணையவழிப் பாதுகாப்புச் சட்டமூலத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று சான்றுரைப்படுத்தினார். 04▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

## சரத் பொன்சேகாவின் எதிர்ப்பையடுத்து

# ஐக்கிய மக்கள் சக்தியைவிட்டு வெளியேறிய தயா ரத்நாயக்க?





சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்ட முன்னாள் இராணுவத் தள பதி ஜெனரல் தயா ரத்நாயக்க, இன்று காலை பொரளையில் உள்ள மவ்பிம ஜனதா கட்சியின் தலைமையகத்துக் குச் சென்று அக்கட்சியின் தலைவர் திலித் ஜயவீரவைச் சந்தித்து கலந்துரை யாடியுள்ளார் என சிங்கள இணைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியில் கடந்த 29 ஆம் திகதி இணைந்துகொண்ட தயா ரத்நாயக்கவுக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் ஆலோ சகர் பதவியொன்றும் வழங்கப்பட்டது.

எனினும், தயா ரத்நாயக்கவைக் கட்சியில் இணைத்தமைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரான நாடா ளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். அத்துடன், ஊடக சந்திப்பொன்றை நேற்று நடத்தி கடும் விமர்சனங்களை யும் அவர் முன்வைத்திருந்தார்.

இந்நிலையிலேயே தயா ரத்நாயக்க மவ்பித ஜனதா கட்சி பக்கம் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது. சந்திப்பு தொடர்பான புகைப்படங்களும் வெளி யாகியுள்ளன.



# பொலிஸாரின் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். வைத்தியசாலையில்

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோ கத்தர்கள் இருவரே மேற்படி இளைஞர் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரி விக்கப்படுகின்றது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர் பில் விசாரணைக்குச் செல்லாதமை யால் பொலிஸார் வீதியில் வைத்து தன்னைக் கடுமையாகத் தாக்கினர் என்று பாதிக்கப்பட்டவர் வைத்திய சாலை பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப் பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பஸ் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்குமாறு வேண்டுகோள்

## ஓட்டோ கட்டணத்தில் மாற்றம் இல்லை

ஒட்டோ டீசல் விலை அதிகரிக்கப் பட்டுள்ளதால் பஸ் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சரிடம் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், ஆரம்பக் கட்டணத்தை 30 ரூபாவில் இருந்து 34 ரூபா வரை அதிகரிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் இது தொடர்பில் முடிவு எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவை கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. எனினும், ஓட்டோ கட்டணங்களில் மாற்றம் வராது என ஓட்டோ ஓட்டுநர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

## பதுளையில் ஹெரோயினுடன் 27 வயது இளைஞர் சிக்கினார்



(ராமு தனராஜ்)

பதுளை, ரிதிபான பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர் .

ரிதிபான பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபரிடம் இருந்து ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஓட்டோ சாரதியாகக் கடமையாற்றுகின்றார் எனவும், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றார் எனவும் பொலிஸார் கூறினர்.

மேற்படி நபர் விசாரணைகளின் பின்னர் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பதுளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



## கப் ரக வாகனம் மோதி மரக்கறி கடை சேதம்!

பதுளை – பசறை பிரதான வீதியில் 2 ஆம் கட்டைப் பகுதியில் கப் ரக வாகனமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

பதுளையில் இருந்து பசறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கப் ரக வாகனம், வீதியை விட்டு விலகி, மரக்கறி கடையுடன் மோதியுள்ளது.

விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. மரக்கறி கடை சேதமடைந்துள்ளது.

இந்த விபத்து தொடர்பில் பதுளை போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மைத்திரிபால தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் இணையமாட்டோம்

## விமல் எம்.பி. அறிவிப்பு



“சிங்கங்கள், பன்றிகளின் பண்ணைக்குள் செல்லாது. எனவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் நாம் இணையமாட்டோம்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமை குறித்தும், மைத்திரிபால சிறிசேன தரப்பால் உருவாக்கப்பட்டு வரும் புதிய கூட்டணி குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மைத்திரிபால சிறிசேன அரசியல் ரீதியில் பொய்யர். அவருடன் கூட்டு அரசியல் பயணத்துக்குத் தயாரில்லை. பன்றிகள்தான் பன்றிகளின் பண்ணைக்குள் செல்லும், மாடுகள் மாட்டுத் தொழுவங்களுக்குள் செல்லும். நாம் சிங்கங்கள். இழுநிலைக்கு விழமாட்டோம். சிலவேளை எமது பக்கம் உள்ள சில பன்றிகள் அவற்றின் பண்ணை நோக்கிச் செல்லக்கூடும்.



அதேவேளை, எட்கா மட்டுமல்ல எம்.சி.சி. உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்கான பேச்சுகளும் இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகள் குரல் எழுப்பாமை கவலையளிக்கின்றது.”

– என்றார்.

# சகல மதுபானசாலைகளும் சுதந்திர தினமன்று பூட்டு!

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.




## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அமைச்சர் கெஹலியவுக்கு...**

அத்துடன் அவருக்கு வெளிநாடு செல்வதற்கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவுகளை இன்று பிறப்பித்துள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னிலையில் ஆஜராகவிருந்தார். எனினும், மற்றுமொரு வழக்கு தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் ஆஜராக வேண்டியிருந்தமையால் அவர் ஆஜராகத் தவறியிருந்தார். இதனால் அமைச்சர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வேறு திகதி கோரியிருந்தார்.

இந்நிலையிலேயே கொழும்பு, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முன்பாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்ட 10 சிவில் சமூக ஆர்வலர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் அவர்களை இன்று பிணையில் விடுவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவைக் கைது செய்யுமாறு கோரி சிவில் சமூக ஆர்வலர்கள் நேற்று மாலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முன்பாகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டபோதே கைது செய்யப்பட்டனர்.

**25 நாள்களுக்குள்...**

இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்களில் 136 பேர் பலியாகியுள்ளனர். மேலும் சிலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அதேவேளை, கடந்த ஆண்டு 22 ஆயிரத்து 804 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன், அவற்றில் 2 ஆயிரத்து 280 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கிளிநொச்சியில்...**

மேற்படி இளைஞர் கடந்த வெள்ளிக்கிழமை தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அருகில் நின்ற வேலியுடன் மோதுண்டு தலையில் பலமாக அடிபட்ட நிலையில் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

**நிகழ்நிலை...**

இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2024 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டமாக நடைமுறைக்கு வருகின்றது.

அத்துடன், நாடாளுமன்றத்தில் விவாதித்து திருத்தங்களுடன் கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தேசிய நீரளவை சட்டமூலம் மற்றும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் ஆகியவற்றிலும் சபாநாயகர் தனது கையொப்பத்தையிட்டு இன்று சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய இந்தச் சட்டமூலங்கள் 2024ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க தேசிய நீரளவை சட்டம் மற்றும் 2024ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன.



# கல்வி, சுகாதாரத்துக்கு இல்லாத பணம் அடக்குமுறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம்

நாட்டில் கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கு அரசால் நிதி ஒதுக்க முடியாது உள்து என்று தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், மக்களை அடக்குவதற்காகக் கண்ணீர் புகை, இறப்பர் தோட்டாக்கள், நீர் தாரை தாக்குதலை நடத்தும் இயந்திரம் வாங்குதல் போன்றவற்றுக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 74 ஆவது கட்டமாக, மாத்தறை, கொம்பத்தன விஜயபா கனிஷ்ட வித்தியாலயத்துக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று (31) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஷவின் காலத்தில் வழங்கப்பட்ட மதிய உணவைக் கூட வழங்குவதற்கு அரசிடம் பணம் இல்லாவிட்டாலும், மக்கள் அடக்கு முறைக்குட்படுத்த பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டின் பாடசாலை மாணவர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு 31 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை புதிய போக்கு வரத்து வீதி ஒழுங்குத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. அரசு இவ்வாறு செய்யும் போது, 31 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையிலும் அதன் பிறகும் ஐக்கிய மக்கள் சக்தி மாத்தறை, காலி மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் தொடர்ச்சியாக 17 பாடசாலைகளுக்கு 17 ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கவுள்ளது.

பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திர தினத்தை கொண்டாடும் போது, உண்மையான இலவச கல்வியின் அர்த்தப்பாட்டை நனவாக்குவதே இதன் நோக்கம்.

88 மற்றும் 89 இல் ஏற்பட்ட பாரிய உள்நாட்டு கிளர்ச்சிகள் காரணமாக அப்போதைய ஜனாதிபதி இளைஞர் ஆணைக்குழுவை நியமித்தார். அமைச்சர் ஜி.எல். பீரிஸும் அதன் அங்கத்தவர்களில் ஒருவராவார். இந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம், நகரத்துக்கு ஒரு கவனிப்பும், கிராமத்துக்கு வேறு ஒரு கவனிப்புமே இளைஞர்களின் அமைதியின்மைக்குக் காரணம் என அடையாளப்படுத்தின. இந்தக் குறைபாட்டைக் கண்டறிந்து, கிராமப்புறங்களில் கல்வி அபிவிருத்திக்கு பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உடனடியாகச் செயல்படுத்தப்பட்டது. இது 1993 வரை மட்டுமே முன்னெடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய குழு யார் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

இன்று 220 லட்சம் மக்களும் நாட்டில் நிலவும் பொருளாதார, சமூக, அரசியல் பிரச்சினைகளின் தீர்வுக்காக காத்திருக்கின்றனர். இவ்வாறான தீர்வுகளை வழங்கக் கூடிய குழு யார் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

அரசியல் நாடகங்களுக்கு ஏமாற வேண்டாம், நாட்டுக்கு தீர்வுகளும் பதில்களுமே தேவை. அதிகாரம் இல்லாமல் முழு நாட்டுக்குச் சேவை செய்த ஒரே அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே என்றும், முன்னைய எதிர்க்கட்சிகளோ அல்லது தற்போதைய எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகளோ இவ்வாறான சேவையை செய்யவில்லை .

நாட்டின் 9 மாகாண சபைகளை மையமாகக் கொண்டு 9 புதிய தாதியர் கல்லூரிகளை ஆரம்பித்து, இதை அரச தனியார் கூட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்துவோம். இதனூடாக உயர்தர தாதியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி சிறந்த வாழ்க்கை தரத்தை உருவாக்க முடியும்.

நாட்டைப் புதிய தொழில்நுட்பப் புரட்சிக்கும், புதிய கல்வி முறையின் மூலம் கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் யுகத்துக்கும் இட்டுச்செல்லும் பாரிய அபிவிருத்தி பயணத்தின் முன்னோடிகளாக மாறுவதற்கு அனைவரும் தயாராகுங்கள்.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேசிய வாக்காளர் தினம்

இலங்கையில் இன்று ஒரு முக்கிய தினம். அது சத்தம் சந்தடியின்றிக் கடந்து போகின்றது.

ஆம். இன்று பெப்ரவரி முதலாம் திகதி. இலங்கையின் தேசிய வாக்காளர் தினம்.

இந்தியாவில் இது ஜனவரி 25ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அதனை ஒட்டி வாக்காளர்களையும், ஜனநாயகத்தின் முக்கிய பங்கான வாக்களிப்பையும் பற்றிய விடயங்கள் குறித்து நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல நிகழ்வுகள் அங்கு நடைபெற்றன. ஒவ்வொரு ஆண்டும் அங்கு அப்படி நடைபெறுவது வழமை.

ஆனால் இலங்கையில் தேசிய வாக்காளர் தினம் ஆரவாரமின்றி - பெரிய அளவிலான நிகழ்வுகள், ஏற்பாடுகள் ஏதும் இல்லாமல் - கடந்து போகின்றது.

மக்களுக்கான வாக்களிப்பு உரிமையே மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றத்தினாலும், அந்த நாடாளுமன்றத்தின் பிரதிநிதியாக அதிகாரத்துக்கு வந்திருக்கும் ஜனாதிபதியினாலும் மறுக்கப்பட்டு வரும் நிலையில் தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதை அனுஷ்டிப்பதில் என்ன அர்த்தம் இருக்க முடியும் என்று கருதி அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விட்டிருக்க கூடும். அதில் நியாயமும் இருக்கவே செய்கின்றது.

தேசிய ரீதியில் கடந்த ஆண்டு முற்பகுதியில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. வேட்பு மனுக்கள் கோரி, ஏற்றுக் கொள்ளப்பட்டு, வேட்பாளர்கள் எல்லாம் களத்தில் இறங்கிப் பிரச்சாரங்களையும் ஆரம்பித்து, ஒரு பகுதி வாக்குச் சீட்டுகளும் அச்சான பின்னர், ஆட்சித் தலைமையில் இருக்கும் ஜனாதிபதியினால் அந்தத் தேர்தலே முறியடிக்கப்பட்டிருக்கின்றது. தேர்தலுக்கான நிதியை நாட்டின் நிதி அமைச்சராக இருக்கும் ஜனாதிபதியே எதேச்சாதிகாரமாக தடுத்து, அந்தத் தேர்தலை நடத்த விடாமல் குழப்பியடித்துள்ளார். அந்தத் தேர்தலுக்கான நிதியை விடுவிக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் அதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காதில் போட்டுக் கொள்ளவில்லை.

மக்களின் இறைமையை மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் மற்றொரு தேர்தல் என்று உயர்நீதிமன்றமே குறிப்பிட்டுள்ள மாகாண சபை தேர்தல்களும் கடந்த ஆறு, ஏழு வருடங்களாக நடைபெறவில்லை. நடைபெற விடாமல் அதுவும் அரசியல்வாதிகளினால் - ஆட்சியில் இருந்தவர்களினால் - குழப்பியடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களை நடத்த விடாமல் குழப்பி அடிப்பதில் பெரும் சூத்திரதாரியான ரணில் விக்கிரமசிங்கவே இந்த மாகாணசபை தேர்தல்களுக்கும் ஆப்படித்தார்.

மாகாணசபைத் தேர்தல் முறைமையை சீர் செய்வதற்காக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வரப் போகின்றார் என்று தெரிவித்து, அத்தகைய சட்டம் ஒன்றை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு இல்லாமலேயே, அதுவரை இருந்த மாகாண சபை தேர்தல் சட்டத்தை 2017இல் இல்லாமலாக்கினார் இப்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

இணக்கத்துடனான புதிய சட்டமும் வரவில்லை, பழைய சட்டமும் நடைமுறையில் இல்லை, அதனால் கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாக மாகாண சபை தேர்தல்களும் இல்லை. எல்லா மாகாணசபைகளும் ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்கள் மூலமே நிர்வகிக்கப்படும் நிலைமை.

நாடாளுமன்றத்தில் ஒரு வரிப் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை அப்படியே மீளக் கொண்டு வந்து, அதன் வாயிலாக மாகாண சபை தேர்தல்களை நடத்த முடியும்.

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடக்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக அதிகாரத்திலும் பதவியிலும் இருந்த எந்த ஜனாதிபதியும், எந்த அரசும், மக்களின் அந்த இறைமையைப் பிரயோகிக்கும் மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பை நடத்தச் செய்து, அந்தந்த மாகாணங்களில் மக்களாட்சியை மலரச் செய்விக்கும் முயற்சியை எடுக்கவே இல்லை. இப்போதைக்கும் அப்படி முன்னெடுக்கப்படும் எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை.

தத்தமது பதவிகளுக்கு - தங்களின் அரசுகளுக்கு - மக்கள் கருத்தை வெளிப்படுத்தும் அத்தகைய வாக்களிப்பினால் ஆபத்து - அழுத்தம் - பாதிப்பு - பின்னடைவு - வந்துவிடும் என்ற காரணத்தினால் மக்களின் அந்த வாக்களிக்கும் உரிமையைத் தொடர்ந்து மறுக்கும் போக்கே ஆட்சியாளர் மட்டத்தில் நீடிக்கின்றது.

அதுவும் தேர்தல் என்றாலே தொடை நடுங்கியாக இருக்கும் இப்போதைய அரசு தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்துச் சொல்லவே தேவையில்லை. எங்கே தான் அதிகாரத்தில் தொடர்வதற்கு வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கையில், அதற்கு முன்னர் வேறு தேர்தல் எதையாவது நடத்தி, அந்தத் தேர்தல் முடிவுகள் தமக்கு மோசமான பாதிப்பை தந்தால் அதிகாரத்தில் தொடரும் தமது எண்ணம் பகல் கனவாகி விடும் என்ற அச்சத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வேறு எந்தத் தேர்தலுமே நடைபெறாமல் தடை போட்டு வருகின்றார் அவர். மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறித்து வருகின்றார்.

இப்படி மக்களின் வாக்களிக்கும் உரிமையைத் தட்டிப்பறிப்பவரை அரசுத் தலைவராகவும், அரசுப் பிரதிநிதிகளாகவும், மக்கள் பிரதிநிதிகளாகவும் கொண்டிருக்கும் இலங்கை நாடு, தனது தேசிய வாக்காளர் தினத்தை கொண்டாடுவதற்கு இப்படி பெப்ரவரி முதலாம் திகதி பொருத்தமானது அல்ல, ஏப்ரல் முதலாம் திகதிதான் - முட்டாள்கள் தினம்தான் - அதற்குக் கனகச்சிதமானது என்று முடிவு கட்டியிருக்கின்றது போலும்.

அதனால்தான் இன்றைய தேசிய வாக்காளர் தினத்தையும் ஆரவாரமாக அனுஷ்டிக்காமல் அமைதியாகக்கடந்துபோகவிட்டிருக்கின்றார்கள் போலும். இரண்டு மாதம் கழித்து அதை அனுஷ்டிப்பார்களோ என்னவோ...?



# நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமும் தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரமும்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

(இலங்கையில் ஊடக சுதந்தித்துக்கு அச்சுறுத்தலாக, நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். இதுவே மனித உரிமைகளுக்குப் பெரும் அழுத்தம் கொடுப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளது)

**இலங்கையில் ஊடக அச்சுறுத்தல்**

நீண்ட காலமாக இலங்கையில் உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களுக்கு “ஊடகச் சுதந்திரம்” மறுக்கப்பட்டுள்ளதோடு, கொலை அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் இருந்துள்ளன.

இலங்கையைப் பொருத்தவரை சுதந்திரமாக செய்திகள் சேகரிப்பதற்கோ, சம்பவ இடங்களுக்குச் சென்று உண்மை நிலவரத்தை ஆய்வு செய்யவோ, பாதிக்கப்பட்ட மக்களிடம் உண்மைகளைக் கேட்டறியவோ முடியாத நிலையே இன்னமும் இருக்கின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கைச் செய்திகளின் நம்பகத்தன்மை எவ்வாறானதாக இருக்கும்? உண்மை நிலைப்பாடுகளை மக்களுக்கு அறியத்தர முற்படும் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றனர்.




அத்துடன் பல ஊடகவியலாளர்கள் கொலைச் செய்யப்பட்டும் உள்ளனர். கொலை செய்யப்பட்ட இலங்கையின் ஊடகவியலாளர்கள் எண்ணிக்கை பலருக்கும் தெரியாததாகும்.

இதனால் பல ஊடகவியலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறிச் சென்றனர். அத்துடன் லசந்த விக்கிரமதுங்க போன்ற பிரபல்யமான ஊடகர்கள் கொலை செய்யப்பட்டதும் அறிந்ததே.

**நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம்**

இலங்கை நாடாளுமன்றில் ஜனவரி 24 இல் நிறைவேற்றப்பட்ட நிகழ் நிலைக் காப்புச் சட்டமூலம் நாட்டின் மனித உரிமைகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளுக்குப் பெரும் அழுத்தமாக, கருத்துச் சுதந்திரத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்துவதற்கும், கருத்து வேறுபாடுகளை அடக்குவதற்கும் பயன்படுத்தக் கூடிய அரசின் இந்தச் சட்டம் புதிய ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**தமிழ் மக்களின் ஊடக சுதந்திரம்**

போர்க் காலத்தில் தமிழ் மக்களின் எந்தக் கருத்துக்களும் நிலைப்பாடுகளும் வெளியுலகம் அறியமுடியாதவாறு ஒரு ஊடக முடக்கம் இலங்கையில் தொடர்ந்த வண்ணம் இருந்தது. இது உண்மைகளை அறிவிக்கும் ஊடகங்களின் ஊடகச் சுதந்திரம் அற்ற நிலையாகும்.

குறிப்பாக இலங்கையில் தமிழர்களால் நடத்தப்படும் ஊடகங்கள் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளாகி வந்தது. அத்துடன் ஊடகவியலாளர்கள் கைது, காணாமல் போதல், கொலை செய்யப்படல் போன்றவை தொடர்ந்தன.

சர்வதேச மட்டத்தில் பிரசித்திப் பெற்ற ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். சாதாரண மக்களின் கருத்துச் சுதந்திரம் பாரிய அச்சுறுத்தல்களில் தொடர்ந்தது.

**மனித உரிமையும் கருத்துச் சுதந்திரமும்**

எவ்வித தணிக்கையும், தடையும் இன்றி கருத்தை ஆக்க, அறிய, வெளிப்படுத்த, கற்பிக்க ஒருவருக்கு இருக்கும் சுதந்திரமே கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகும். இது அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று.

கருத்து வெளிப்பாடு என்பது பேச்சுச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், சமயச் சுதந்திரம் போன்ற பல்வேறு சுதந்திரங்களுடன் இணையாக முன்னிறுத்தப்படுகிறது.

பேச்சு, எழுத்து, இசை, நாடகம், ஓவியம், நிகழ்த்தல், பல்லூடகம், அலங்காரம், நம்பிக்கைகள், இணையம் என்று பல்வேறு வடிவங்களிலும் கட்டுப்பாடுகளின்றிக் கருத்துக்களை ஆக்க, அறிய, வெளிப்படுத்த, பகிர ஆகியவற்றுக்கான சுதந்திரம் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகும்.

பேச்சுச் சுதந்திரம் என்னும் தொடர் பல சமயங்களில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பதற்கு ஈடாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பது, வாய்ப் பேச்சை மட்டும் குறிப்பது அல்ல. கருத்து வெளிப்பாடு வேறு பல வழிகளிலும் இடம்பெற முடியும்.

**இலங்கையில் புதிய சட்டமூலம்**

இவ்வருட ஜனவரி 24 அன்று, இலங்கை நாடாளுமன்றம் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேற்ற வாக்களித்தது. குறித்த சட்டம், தடைசெய்யப்பட்ட அறிக்கைகள் என்றால் என்ன என்பதைத் தீர்மானிப்பது மற்றும் அத்தகைய உள்ளடக்கத்தை அகற்றுவதற்கு

தொடர்ச்சி ▼



# நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமும் தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரமும்!

தொடர்ச்சி ▲

இணைய சேவை வழங்குநர்களுக்கு பரிந்துரைகளை வழங்குவது மற்றும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்களுக்கான அணுகலை முடக்குவது உள்ளிட்ட பரந்த அதிகாரங்களை 'ஆன்லைன் பாதுகாப்பு ஆணையத்துக்கு' வழங்குகிறது.

தேசிய பாதுகாப்பு, பொது சுகாதாரம் அல்லது பொது ஒழுங்குக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அல்லது பல்வேறு வர்க்க மக்களிடையே தவறான விருப்பம் மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும் 'தவறான அறிக்கையைத் தொடர்பு கொள்வதற்கான' தடையும் இந்தச் சட்டத்தில் அடங்கும்.

இந்த சட்டமூலம் பல ஆர்வலர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமைகள் உயர் ஆணையரின் ஐ.நா. அலுவலகத்தால் விமர்சிக்கப்பட்டது. அவர்கள் இந்த சட்டமூலம் 'கருத்துச் சுதந்திரத்தின் மீது பாரிய விளைவை ஏற்படுத்தும்' என்றும் கூறியுள்ளனர்.

அரசு உடனடியாக அதைத் திரும்பப் பெற்று, நாட்டில் உள்ள அனைவரின் மனித உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதை உறுதி செய்ய வேண்டும். சட்டத்தின் பல பகுதிகள் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை.

### இலங்கை ஊடக நெருக்கடி

அத்துடன் இணையத்தில் கருத்து சுதந்திரம் மற்றும் தனியுரிமைக்கான உரிமைகளை அனுபவிப்பதை கட்டுப்படுத்தும் பரந்த விதிகள் உட்பட, மேலும் தெளிவற்ற வார்த்தைகள், 'தடைசெய்யப்பட்ட அறிக்கைகள்' போன்ற அகநிலை குற்றங்கள் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன.

சக்தி வாய்ந்த 'ஆன்லைன் பாதுகாப்பு ஆணையம்' கருத்துச் சுதந்திரம் மற்றும் தனியுரிமைக்கான உரிமைகள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையால் (ICCPR) உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசின் சிக்கன நடவடிக்கைகளின் தாக்கம் ஆகியவற்றின் போது மக்கள் தங்கள் கவலைகளைப் பற்றிக் கூறும்போது, இந்தச் சட்டம் அதிகாரிகளால் தவறாகப் பயன்படுத்தப்படும் மற்றும் குடிமை இடத்தை மேலும் கட்டுப்படுத்தவும், விமர்சகர்கள் மற்றும் எதிர்ப்பாளர்களை ஒடுக்கவும் பயன்படுத்தப்படும்.

கடந்த கால தேர்தல்களில், எதிர்ப்புக்களை முறியடித்த நீண்ட வரலாற்றைக் கொண்ட, இலங்கை அதிகாரிகள், தேர்தலுக்கு முன்னரும், தேர்தலின் போதும், பின்னரும் மனித உரிமைகளுக்கு உத்திரவாதமளித்து மரியாதை செய்வதன் மூலம் தமது சர்வதேச மனித உரிமைக் கடமைகள் மற்றும் கடப்பாடுகளை நிலை நாட்டுவதற்கான அரசியல் விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

### அனைத்துலக சட்டமும் உறுதிப்பாடும்

கருத்தை வெளிப்படுத்துவதற்கான உரிமை பல்வேறு மனித உரிமைக் ஆவணங்கள் ஊடாக அனைத்துலகச் சட்டங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான அனைத்துலக உடன்படிக்கையின் 19 ஆவது பிரிவும், மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய உடன்படிக்கையின் 10 ஆவது பிரிவும் இத்தகைய ஆவணங்களுள்




அடங்கும்.

எனினும் பல நாடுகளில் இது முறையாக நிறைவேற்றப்படுவதில்லை. இந்த 19 ஆவது பிரிவில், அனைவரும் எந்தவித இடையூறும் இல்லாமல் சொந்தக் கருத்துக்களை தெரிவிக்க உரிமை கொண்டவர்கள். அத்துடன் அனைவருக்கும் கருத்து சுதந்திரம் உண்டு. தகவலையும் எண்ணக் கருக்களையும் தேட, அறிய, கற்பிக்க உரிமை உண்டு. எழுத்து, கலை, ஊடகம் என எந்த வடிவம் ஊடாகவாயினும் இந்த உரிமை உண்டு.

மேற்குறிப்பிட்ட உரிமைகள் கடமைகளையும் பொறுப்புக்களையும் கொண்டுள்ளது. அதனால் சட்டம் பின்வரும் நோக்கங்களுக்காக சில எல்லைகளை வரையறை செய்யலாம். பிறரின் உரிமைகளை, மதிப்பை கவனத்தில் கொண்டு, தேசிய பாதுகாப்பு, ஒழுக்கம், நலம், அறம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட சட்டம் அமைய வேண்டும்.

எவ்வகையிலும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலமானது தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். மனித உரிமைகளுக்கு பெரும் அழுத்தங் கொடுப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளது.



### சிங்கள தேசத்திடம் இருந்து தமிழர்கள் விடுபடும்வரை

# தமிழ் மக்களின் உரிமைக் குரலை எவராலும் நசுக்கிவிட முடியாது!

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

ஜனாதிபதி உலகத்துக்கு ஒரு ஜனநாயக குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக் கொண்டு தமிழ் மக்களை தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைகளாக அடிமைபடுத்திக் கொண்டிருக்கின்றார். எனவே தமிழர்கள் இந்த சிங்கள தேசத்தின் அடிமை சாசனத்தில் இருந்து விடுபடும் வரை தமிழ் மக்களின் உரிமை குரலை எவரும் நசுக்க முடியாது.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவு தூபியில் 2022 நினை வேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் த.சுரேசுக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்காக அவர் நேற்று புதன்கிழமை (31) மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜராகி பின்னர் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

வடக்குக் கிழக்கு முழுவதும் எங்கள் மக்களைப் பிழையாக வழிநடத்தும் செயற்பாட்டுக்கு நீதிமன்றங்களை பொலிஸார் பிழையாக வழி நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் என்னத்துக்கு எதற்குத் தடைவிதிக்கவேண்டும் என்று தெரியாமல் சட்டத்துக்கு முரணான விடயங்களுக்கு வடக்குக் கிழக்கில் அனுமதி கொடுக்கப்பட்டு எங்களுடைய இறந்த உறவுகளை நினைவு கூர்வதற்கு இந்தத் தடை உத்தரவை பிறப்பிக்கும் செயற்பாடு வடக்குக் கிழக்கில் வருடா வருடம் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது.

அதற்காக மாமாறி மாறி வருகின்ற அரசுக்கள் தங்களின் ஆட்சியை தக்கவைப்பதற்காக தங்களுக்கு ஏற்ற வகையில் சட்டங்களை பிறப்பித்து தமிழ் மக்களுடைய ஜனநாயக உரிமை குரல் நசிக்கி வருகின்றனர்

அதன் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக 5 சட்டங்கள் கொண்டுவரப்பட்டது. அதில் நிகழ் நிரல் சட்டம் பிரதானமானது அது தமிழ் மக்களின் குரலை நசிக்கும் சட்டமாக இருக்கின்றது. இந்த ஜனாதிபதி உல கத்துக்கு ஒரு ஜனநாயகக் குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக் கொண்டு வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைப்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்பதை எங்கள் மக்களும் சர்வதேச மும் விளங்கி கொள்ள வேண்டும்.

காசாமீது இஸ்ரேல் நடத்திவரும் இனப் படுகொலையை உடன் நிறுத்த வேண்டும் என்று தென்ஆபிரிக்க சர்வதேச நீதிமன்றில் கோர, அந்த அறிக்கையை ரணில் ஆதரிக்கின்றார் என்றால் இவரின் இரட்டை வேடம் சர்வதேச மட்டத்தில் எந்தளவுக்கு இருக் கின்றது என்பதை மக்களும் புத்தி ஜீவிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே இந்தச் சட்டங்கள் எல்லாம் பிறப்பிக்கப்படுவது இந்த ஆட்சியையும் அரசையும் தக்கவைப்பதற்காகவே. 1948 இந்த நாட்டில் இருந்து ஆங்கி லேயர் வெளியேறிய பின்னர் சிங்கள ஆட்சியாளர்களிடம் இந்த அதிகாரம் போன பின்னர் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களைத் தொடர்ந்து அடிமைப் படுத்த வருகின்றனர்.

எனவே தமிழர்கள் இந்தத் தீவில் இருந்து அடிமை சாசனத்தில் இருந்து விடுபடும்வரை தமிழ் மக்களின் உரிமைக் குரலை எவரும் நசுக்க முடி யாது. எந்தவிதமான தடைகள் வந் தாலும் தொடர்ந்து பயணிப்போம்.– என்றார்.



ஆர்.என் ஹரன்

# சதுப்பு நிலங்களை பாதுகாப்போம்...!

## பெப்ரவரி 2 ஆம் திகதி உலக சதுப்பு நில தினம்

உலகில் அனைத்துப் பகுதிகளிலும் ஈர நிலங்கள் காணப்பட்டாலும் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், அமேசனை அண்டிய பிரேசில் பகுதிகளில் முக்கியமான ஈரநிலங்கள் காணப்படுகின்றன. உலகில் ஏறக்குறை ஆயிரத்து 112 ஈரநிலப் பகுதிகள் காணப்படுகின்றன. அவை மொத்தமாக 89.37 மில்லியன் ஹெக்ரெயர் நிலப் பகுதிகளைக் கொண்டிருக்கின்றன.

உலகம் முழுக்க மனிதனின் தொடர் செயல்களால் இவை மிகப்பெரிய அழிவை சந்திக்கின்றன. சுற்றுலா தளங்களை உருவாக்குதல், எஸ்டேட் தொழில்கள் ஆகியனவும் இத்தகைய நிலங்களை அழிக்கின்றன. பல்லுயிரி வளம், நிலத்தடி நீர் வளம், நீரை வடிகட்டி நன்னீர் ஆக்குதல், உணவுச் சங்கிலியின் உறுதியான பிணைப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் இவற்றின் அழிவு எல்லாவற்றையும் காணாமல் செய்கிறது.

சுற்றாடல் சமநிலையைப் பேணுவதற்கும் உகந்ததாக ஈர நிலத் தொகுதி காணப்படுகின்றது. ஆறுகள், தாழ்நிலங்கள், ஈரமான புல்வெளிகள், கழிமுகங்கள், கழிமுக, கடலோர குடியிருப்பு பகுதிகள், சதுப்பு நிலக்காடுகள், பவளத் திட்டுகள், மீன் குளங்கள், நெற்பயிர் நிலங்கள், நீர்த் தேக்கங்கள் என பவையெல்லாம் ஈர நிலப் பட்டியலில் உள்ளடங்குகின்றது.

பூமியின் மொத்தப் பரப்பில் 6 சதவீத பகுதி சதுப்பு நிலங்களாக உள்ளன. இவை பெரும்பாலும் இயற்கையாக உருவானவை, மனிதனால் உருவாக்கப்பட்டவை என இரண்டு பிரிவாக வகைப்படுத்தப்படுகின்றன. ஈரநிலக் காடுகள், குட்டைகள் உள்ளிட்டவை இயற்கையாக உருவானவை என்றும், ஏரிகள், குளங்கள், நீர்தேங்கும் குவாரிப் பள்ளங்கள் ஆகியவை மனிதனால் உருவாக்கப்பட்டவை என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஈரான் நாட்டின் ராம்சார் நகரில் சர்வதேச மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டின் முடிவில் உலகம் முழுவதும் உள்ள சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை மக்களிடம் பரப்புவது தொடர்பில் உள்ளூர், மாநில, தேசிய, சர்வதேச அளவில் திட்டங்களை உருவாக்கிச் சதுப்பு நிலங்களைப் பாதுகாக்க வலியுறுத்தும் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. இதுவே ராம்சார் பிரகடனம் எனப்படுகிறது. இவ்வுடன்படிக்கையை சுமார் 168 நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இவ்வுடன்படிக்கைப் பிரகாரம் 1957 ஆம் ஆண்டு முதல் பிரதியாண்டும் பெப்ரவரி இரண்டாம் நாள் உலக ஈரநிலத் தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

சதுப்பு நிலங்களின் முக்கியத்துவம் என்னவென்றால் அதிக நீர்வீழ்ச்சியின் போது பெறப்படும் நீரை உள்வாங்கி வெள்ளம் வராமல் தடுக்கிறது. வெள்ளத் தடுப்பைத் தவிர மேலும் பல முக்கியமான பல நன்மைகள் சதுப்பு நிலத்தில் கிடைக்கின்றன.

வயல் மற்றும் ஏனைய விவசாய நிலங்களினூடாக உணவு உற்பத்தி செய்தல், வடிகாலமைப்பு அல்லது வீட்டுப் பாவனைக்கான கிணறுகளுக்கு நன்னீரை வழங்கல், அழகிய மற்றும் மருத்துவ தாவரங்களை வளர்த்தல், உள்ளக காற்றின் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல், பூச்சிகளை கட்டுப்படுத்தல், வீட்டுத் தோட்டங்களின் மகரந்த சேர்க்கைக்கு துணை புரிதல், உலக வெப்பநிலை சீர்ப்பாட்டுக்கான காபனை சேமித்தல் மற்றும் பிரித்தல் பணியை செவ்வனே செய்தல், பொழுதுபோக்கு மற்றும் கல்வி வாய்ப்புகளை வழங்குதல், சப்பிரதாய பூர்வமான நம்பிக்கைகள், ஆன்மீக மற்றும் கலாசார விடயங்களுக்கு பங்களிப்பு வழங்கல் என்பற்றுடன் கூடிய உல்லாசத் துறைசார் நன்மைகள் என்பன இவற்றுள் உள்ளடங்குகின்றன.

தொடர்ச்சி ▼

# சதுப்பு நிலங்களை பாதுகாப்போம்...!

**தொடர்ச்சி ▲**

இந்தச் சதுப்பு நிலங்களாவன பல்வேறு மனித செயற்பாடுகள் காரணமாக அதன் தரத்தை இழக்கிறது. இவ்வாறு சதுப்பு நிலங்கள் தரமிழப்பதால் அவற்றில் இருந்து கிடைக்கும் நன்மைகளும் படிப்படியாக குறைந்து வருகிறது.

ஈரநிலங்கள் உயிரினங்களின் பல்வகைமைத் தன்மையைக் கொண்டிருப்பதால் 'நகரங்களின் பச்சை நுரையீரல்கள்' என்று அழைக்கப்படுகின்றன. சேற்று நிலம் என்றும் சகதி என்றும் மக்களால் அசௌகரியமாக அழைக்கப்பட்டுக் கழிவுகள் கொட்டும் இடமாக மாறிக் கொண்டிருக்கின்ற இடங்களுக்கு ஈரநிலங்கள் என்று பெயர். அதாவது குட்டை, குளம், ஏரி, போன்றவையே இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

இந்த நிலமானது சூழல் கலாசார அடிப்படையிலும் பொருளாதாரத் துறையிலும் முக்கியத்துவமாகின்றது. இந்நிலத்தோடு தொடர்புடைய வரலாறு மனித நாகரிகத்தின் ஆரம்பத்தோடு பிணைந்துள்ளதெனலாம். இந்து நதிப் பள்ளத்தாக்கின் மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நாகரிகமும் இலங்கையின் மல்வத்து ஓயாவை அண்டி உருவான முதற் குடியேற்றமும் ஈர நிலத்தை மையமாகக் கொண்டு உருவானவை.

பிரத்யேக குணங்கள் கொண்ட புல் செடிகள், அரிய வகை மரங்கள், நீர் நிலைப் பறவைகள், சில வகை விலங்குகள் என அனைத்தும் ஒருங்கிணைந்து வாழும் பகுதியாக சதுப்பு நிலங்கள் உள்ளன. எவ்வித திட்டமிடலும் இல்லாமல் வேகமாக அதிகரித்து வரும் நகரமயமாக்கல், வேளாண் உற்பத்தி அதிகரிப்புக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள், அணைகள் உள்ளிட்ட கட்டுமானத் திட்டங்கள், குடியிருப்புகள், தொழிற் சாலைகளுக்காக ஆக்கிரமிப்பு செய்வது போன்ற நடவடிக்கைகள் மூலம் இயற்கையின் கொடையான சதுப்பு நிலங்கள் பாழாகி வருகின்றன.

ஈர நிலங்களில் நத்தைகள், சேற்று நண்டு, கடல் நண்டு, கடலேரி நண்டு, ஒற்றைக் கவ்வி நண்டு, சிங்கி இறால், பால் இறால், கண்டற்சிப்பி, ரெலஸ் கோபியம் சிப்பி, லிற்றோரிச் சிப்பி, கண்டல் நீலச் சிப்பி, ஊரி, நீர்ப்பல்லி. கண்டற்கொக்கு, வெண்கொக்கு, கடற்புள், ஆக்காட்டிக் கருவி, மீனினங்கள், பாலூட்டிகள், ஈருடக வாழிகள், ஊர்வன போன்ற உயிரினங்களும், பறவைகளும் சஞ்சாரம் செய்கின்றன.

தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும் இடங்கள் ஈரநிலங்கள் ஆகும். சேற்று நிலம், சகதி, முற்றா நிலக்கரியுள்ள நிலம், நீர் நிலைகள் ஆகியவை ஈரநிலங்கள் எனப்படும். நீர் நிலைகள் இயற்கையாக அல்லது செயற்கையாக அமைந்தவையாகவோ, நிலையான, அல்லது பாயும் நீரைக் கொண்டவையாகவே நிரந்தரமானவையாகவோ, தற்காலிகமானவையாகவோ, நன்னீரை அல்லது உப்புநீரை உடையவையாகவோ இருக்கலாம். வற்றுப் பெருக்கின் போது ஆறு மீற்றருக்கு அதிகரிக்காத ஆழமுள்ள கடல் நீரைக் கொண்டுள்ள பகுதிகளும் ஈரநிலங்களுக்குள் அடங்கும் என்று கூறப்படுகிறது.

மனிதன் மேல் ஈரநிலத்துக்கு உள்ள ஈரம், ஈர நிலத்தில் மனிதனுக்கு இல்லை இதனால் மிகப்பெரிய அழிவை சந்திக்கின்றன. சுற்றுலா தலங்களை உருவாக்குதல், ரியல் எஸ்டேட் தொழில்கள் ஆகியனவும் நமது நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகளும், பாராமறிப்பு இன்மையும் இந்த நிலங்களை பாழ்ப்படுத்தி வருகிறது.

எனவே இந்த நிலங்களை பாதுகாக்கவும் அதன் பயன்களை மக்களிடம் கொண்டு செல்லவும் இந்தத் தினத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஈரநிலப் பிரதேசங்களை பாதுகாப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

தாவரப் போர்வையை பாதுகாத்தல் – அலையாத்தி தாவரங்களின் முக்கியத்துவத்தை சகலருக்கும் உணர்த்துவதன் மூலம் அவற்றை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ளலாம். அத்துடன் அழிக்கப்பட்ட தாவரங்களுக்கு பதிலாகவும் மேலதிகமாகவும் கடல் தாவரங்களை மீள்நடுகை மூலம் உருவாக்குதல்.

பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அறிவித்தல் – ஈரநிலங்கள் அமைந்து காணப்படும் பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக அறிவித்து அந்தப் பிரதேசங்களில் ஈரநிலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவோரை சட்டத்தின்முன் நிறுத்துவதன் மூலமும் ஈரநிலப்பகுதிகளைப் பாதுகாக்கலாம்.

நகரக் கழிவுகளை கொட்டுவதை தவிர்த்தல் – ஈரநிலப் பிரதேசங்களில் நகரக் கழிவுகளை கொட்டுவதை தவிர்த்துத் தொலைவான இடங்களில் அவற்றை கொட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தோ அல்லது கூட்டுஉரம் தயாரிப்பதற்கோ பயன்படுத்தலாம். இதன் மூலம் ஈரநிலப் பகுதிகளில் திண்மக் கழிவுகள் சேர்வதைக் குறைக்கலாம்.

தொழிற்சாலைகளை வேறுபகுதிகளில் அமைத்தல் – ஈரநிலங்கள் உள்ள பகுதிகளில் அமைந்து காணப் படுகின்ற தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுகள் ஈரநிலங்களில் சேர்வதைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், அக்கைத்தொழிற்சாலைகளை வேறுபகுதிகளில் அமைத்தல்.

ஈரநிலப்பகுதிகளில் நிலம் நிரப்பி குடியிருக்கும் தேவையை கருத்தில் கொண்டு அத்தகையவர்களுக்கு வேறு சமவெளிப் பிரதேசங்களில் வசிப்பிடவசதி அல்லது நிலத்துக்கான உரிமையைப் பெற்றுக் கொடுத்தல்.

ஈரநிலங்கள் உயிரினங்களின் பல்வகைமைத் தன்மையைக் கொண்டிருப்பதால் 'நகரங்களின் பச்சை நுரையீரல்கள்' என்று அழைக்கப்படுகின்றன. சேத்து நிலம் என்றும் சகதி என்றும் மக்களால் அசௌகரியமாக அழைக்கப்பட்டுக் கழிவுகள் கொட்டும் இடமாக மாறிக் கொண்டிருககும் இடங்களுக்கு ஈரநிலங்கள் என்று பெயர். அதாவது குட்டை, குளம், ஏரி, போன்றவையே.

தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரால் மூடப்பட்டிருக்கும் இடங்கள் ஈரநிலங்கள் ஆகும். சேற்றுநிலம், சகதி, முற்றா நிலக்கரியுள்ள நிலம், நீர்நிலைகள் ஆகியவை ஈரநிலங்கள் எனப்படும். நீர் நிலைகள் இயற்கையாக அல்லது செயற்கையாக அமைந்தவையாகவோ, நிலையான, அல்லது பாயும் நீரைக் கொண்டவையாகவே நிரந்தரமானவையாகவோ, தற்காலிகமானவையாகவோ, நன்னீரை அல்லது உப்பு நீரை உடையவையாகவோ இருக்கலாம். வற்றுப் பெருக்கின் போது ஆறு மீற்றருக்கு அதிகரிக்காத ஆழமுள்ள கடல் நீரைக் கொண்டுள்ள பகுதிகளும் ஈரநிலங்களுக்குள் அடங்கும் என கூறப்படுகிறது.

எது எப்படி எனினும் மனிதனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் அழிவைத் தடுக்க முடியாது. நாம் இயற்கையுடன் ஒன்றித்துச் சென்று அதனை நேசிக்கத் தொடங்கினால் அது நம்மை நேசிக்கும். ▮



# அம்பாறையில் அகப்படும் கணையான் மீன் இனம்!

(பாறுக் ஷிஹான்)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கணையான் மீன் இனங்கள் அம்பாறை ஆறுகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக கடலை நோக்கி ஓடும் நீரோடைகள் ஆறுகளில் இருந்து 3 வகையான கணையான் வகை மீன்கள் கரை வலைகள் கட்டுவலைகள் தூண்டில்கள் மூலம் பிடிக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சுமார் 5 முதல் 25 கிலோ எடையுள்ள பாரிய கணையான் மீன் இனங்களே இவ்வாறு பிடிபடுகின்றன.

இவ்வகையான மீன்கள் ஆயிரம் ரூபா தொடக்கம் 9 ஆயிரம் ரூபா வரை விற்பனையாகி வருகிறது என்றும் பொது மக்களும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நிந்தவூர், பாலமுனை அட்டாளைச்சேனை பகுதிகளில் இவ்வாறான மீன் வகைகள் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, மீனவர்கள் பிடிக்கப்படும் கணையான் மீன்களை பால் கணையான், செங்கணையான், முள் கணையான் என வகைப்படுத்தி விற்ப னை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.




# புரவுன்லோ தோட்டத் தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி கவனவீர்ப்பு

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்லோ தோட்ட தொழிலாளர்கள் சம்பள அதிகரிப்புக் கோரி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று (01)நடத்தியுள்ளனர்.

காலை 7.30 மணி முதல் 8.30 மணிவரை ஒரு மணித்தியாலம் சுமார் 200 ஆண், பெண் தொழிலாளர்கள் மஸ்கெலியா நோட்டன் பிரதான சாலையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இன்று நாட்டில் சகல பொருள்களதும் விலைகள் நாளாந்தம் உயர்ந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் தமது வேதனத்தை உயர்த்தித் தருமாறு கோரிக்கை விடுத்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறிய படி எமக்கு 1700 ரூபா வேதனம் நாளாந்தம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை முன் வைக்கப்பட்டது.



# ரயிலில் பொதிகளை அனுப்ப அதிகரிக்கப்பட்டன கட்டணங்கள்

ரயில்களில் பொதிகளை அனுப்புவதற்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டண திருத்தம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண அதிகரிப்பானது இன்று (01) முதல் நடைமுறைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டணங்களை திருத்தம் செய்து, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலானது கடந்த 18 ஆம் திகதி போக்குவரத்த அமைச்சர் பந்துல குணவர்தனவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 50 ரூபாவாக இருந்த குறைந்த பட்சக் கட்டணம் 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஜனவரி மாதத்தில் மட்டும் 2 லட்சம் சுற்றுலாவிகள்!

இலங்கைக்கு ஜனவரி மாதத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

அதன்படி கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 2 லட்சத்து ஆயிரத்து 687 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 16 மாதங்களில் 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் தாமரை கோபுரத்தை பார்வையிட்டுள்ளனர் என்று தாமரை கோபுர நிர்வாகப் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், 50 ஆயிரமாவது சுற்றுலாப் பயணியாக வருகை தந்த பல்கேரிய பெண் ஒருவருக்கு நேற்று (31) சிறப்புப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டுக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் இந்தியர்கள், ரஷ்யா, பிரிட்டன் மற்றும் ஜேர்மனி நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் கொலை வழக்கிலிருந்து விடுதலையான ராபர்ட் பயஸ் திருச்சி முகாமில் உண்ணாவிரதம்

## போராட்டம் தொடரும் என முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம்

திருச்சி சிறப்பு அகதிகள் முகாமில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்த விடுதலையான ரொபர்ட் பயஸ் நேற்று முதல் கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தான் உட்பட சாந்தன், முருகன், ஜெயக்குமார் ஆகியோரை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கக் கோரி ரொபர்ட் பயஸ் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டு ஆனபோதும், முகாமில் தமது உரிமைகளுக்கோ, உணர்வுகளுக்கோ எந்த மதிப்பும் இல்லை என திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் மூலமாக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு ரொபர்ட் பயஸ் மனு அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வந்த நிலையில், ஏறக்குறைய ஒன்றை ஆண்டுகளுக்கு முன்பு உச்ச நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டோம். சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டாலும் சிறப்பு முகாம் எனப்படும் மற்றொரு சிறையில் தான் அடைத்தார்கள்.

திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் ராபர்ட் பயஸ்,ஜெயக்குமார், சாந்தன், முருகனும், அடைத்து வைக்கப்பட்டுள்ளோம். சிறப்பு முகாம் எனப்படுவது



சிறையை விட கொடுமையானதாக இருக்கிறது. மேலும் இங்கு நடை பயிற்சி செய்வதற்கோ நண்பர்களை பார்ப்பதற்கோ முடியவில்லை. சிறைவாசிகளோடு பழகுவதற்கு கூட எந்தவித அனுமதியும் வழங்கப்படுவதில்லை. சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட நாளில் இருந்து பல நோய்களுக்கு உள்ளாகியுள்ளோம்.

மேலும் எனது உடல் நலத்தை சரி செய்ய நடை பயிற்சி செய்ய அனுமதி கேட்டும், இதுவரை எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. இதனால் எனது உடலில் பல நோய்கள் வந்துள்ளன. கடந்த மாதம் திருச்சி அரசு மருத்துவமனை சென்று பரிசோதனை செய்த போது ரத்த அழுத்தம், கொழுப்பு, சிறுநீரகக் கல், மூட்டு வலி, இருக்கின்றன என மருத்துவர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளார்கள்.

அதனால், கடந்த 22 ஆம் திகதி மீண்டும் மாவட்ட ஆட்சியருக்கு நடை பயிற்சி செய்யவும், விளையாடவும் அனுமதி கேட்டு கடிதம் எழுதியும் இதுவரை எந்தவித பதிலும் இல்லை. மேலும் இந்த முகாமில் எனது உரிமைகளுக்கோ, உணர்வுகளுக்கோ, எந்த மதிப்பும் இல்லை. அதனால் தான் சாந்தன் உடல்நல குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அதே நிலை தொடர்ந்தால் நாம் இங்கேயே இறப்பது உறுதி. இதற்கு இங்குள்ள அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

அகதிகள் நேரடியாக பிற நாடு செல்வதற்கு இலங்கை அரசு கடவுச்சீட்டு வழங்க அனுமதி வழங்கி வருகிறது. அதற்கு இலங்கை தூதரகம் அழைத்து போய் கடவுச்சீட்டு பெறவும் அனுமதி கேட்டுள்ளேன். இதுவரை எந்த பதிலும் கிடைக்காததால் வேறு வழியின்றி புதன்கிழமை முதல் கால வரையற்ற உண்ணா மறுப்பு போராட்டத்தை முன்னெடுக்க உள்ளேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய கோரியும், சிறப்பு முகாமை இழுத்து மூட கோரியும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் எதிர்வரும் 3 ஆம் திகதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ராமர் கோயில் கட்டுவதற்கு ஜெயலலிதா விரும்பினார்

## டி.டி.வி.தினகரன் தகவல்

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்று ஜெயலலிதாவும் விரும்பினார் என அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

டி.டி.வி.தினகரன் மதுரையில் செய்தியாளர்களிடம் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“மக்களவைத் தேர்தலுக்காக சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். உறுதியான பிறகு, கூட்டணி குறித்த விவரங்களை வெளியிடுவோம்.

தேர்தல் வெற்றி, தோல்விகளைத் தாண்டி ஓ.பன்னீர்செல்வத்துடன் அரசியல் ரீதியாக சேர்ந்து பயணிக்க முடிவு செய்துள்ளேன். நாட்டின் பிரதமரைத்





தேர்வு செய்யும் கூட்டணியில் அ.ம.மு.க. இடம்பெறும். தி.மு.க. கூட்டணியை பலமாக அமைத்தாலும், மக்கள் அவர்களுக்கு எதிராகத்தான் இருக்கிறார்கள்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டதை, மதங்களைத் தாண்டி அனைவரும் வரவேற்றுள்ளனர். இது மகிழ்ச்சியான விஷயம். அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்று ஜெயலலிதாவும் விரும்பினார்.” – என்றார்.



# கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்

## வரவு - செலவு திட்ட உரையில் அமைச்சர் நிர்மலா சீதாராமன் தகவல்

இந்திய நாடாளுமன்றத்தில் இடைக் கால வரவு - செலவு திட்டத்தை சமர்ப் பித்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், அனைவரையும் உள்ளடக் கிய வளர்ச்சி திட்டங்களின் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் பல பரிமாண வறுமையிலிருந்து விடு தலை பெற உதவியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர் தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, தற்போது இடைக்கால வரவு - செலவு திட்டம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்து மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உரையாற்றுகையில்,

"இந்தியப் பொருளாதாரம் கடந்த 10 ஆண்டுகளில் ஆழமான நேர்மறை யான மாற்றத்தைக் கண்டுள்ளது. மக்க ளிடம் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. பிரத மர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு பதவியேற்றபோது, பல்வேறு சவால்களை எதிர்கொண்ட நிலையில் நாடு இருந்தது. அந்த சவால்கள் முறியடிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரம் ஒரு புதிய வீரியத்தை பெற்றுள்ளது. அதோடு, வளர்ச்சியின் பலன்கள் அதிக அளவில் மக்களை சென்றடைந்துள்ளன.

இதன் காரணமாக, எங்கள் அரசு அது செய்துள்ள அற்புதமான பணியின் காரணமாக அற்புதமான ஆணையுடன் ஆசீர்வதிக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இலவச 'ரேஷன்', அனைவருக்கும் வங்கிக் கணக்கு, அனைவருக்கும் குடிநீர் உள்ளிட்ட திட் டங்கள் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் ஒவ்வொரு தனிநபரையும் இலக்கு வைத்து வளர்ச்சித் திட்டங்கள் சென்ற டைந்துள்ளன. இதன் மூலம் கிராமப் புறங்களில் உண்மையான வருமானம் அதிகரித்துள்ளது.

2047 இற்குள் நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்ற இலக்கை அடைய, மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டியது அவசியம். எங்கள் அர சாங்கத்தைப் பொறுத்தவரை, சமூக நீதி என்பது பயனுள்ள மற்றும் அவசி யமான ஒன்று. தகுதியுடைய அனைவ ரையும் உள்ளடக்கும் அணுகுமுறையே சமூக நீதிக்கான உண்மையான மற்றும் விரிவான அணுகுமுறையாகும். சமூக அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் நன்மைகள் வழங்கப் படுகின்றன. எங்கள் அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுகிறது. உண் மையான மதச்சார்பற்ற அரசு இது. சமூக-பொருளாதார மாற்றத்தை அடைய செலவினங்களில் கவனம் செலுத்தாமல் விளைவுகளில் கவனம் செலுத்துகிறோம்.

வறுமையைக் கையாள்வதற்கான முந்தைய அணுகுமுறை சுமாரான விளைவுகளையே ஏற்படுத்தின. அனை வரையும் உள்ளடக்கிய வளர்ச்சி திட்டங் களின் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி மக்கள் பல பரிமாண வறு மையிலிருந்து விடுதலை பெற உதவி யுள்ளோம். ஏழைகளுக்கு அதிகாரமளிப் பதன்மீது நாங்கள் நம்பிக்கை கொண்டி ருக்கிறோம். நேரடி பணப் பரிமாற்றத் திற்காக உருவாக்கப்பட்ட பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா கணக்குகள், 34 லட்சம் கோடி ரூபா சேமிப்புக்கு வழிவ குத்துள்ளன.

விவசாயிகளுக்கு அதிக அளவாக 2.7 லட்சம் கோடி ரூபா நிதி உதவியை அரசு வழங்கி உள்ளது. 78 லட்சம் தெருவோர வியாபாரிகளில் இருந்து 2.3 லட்சம் பேர் பிரதம மந்திரி ஸ்வாநிதி யோஜனா திட்டத்தின் கீழ் மூன்றாவது முறையாக கடன் பெற்றுள்ளனர்.

பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் கைவினைஞர்களுக்கு தொடக்கம் முதல் இறுதி வரையிலான ஆதரவை அளிக்கிறது. அதேபோல், மாற்றுத்திற னாளிகள், திருநங்கைகளுக்கு அதி காரம் அளிக்கும் திட்டங்களை செயல் படுத்துவதன் மூலம் இந்த அரசாங்கம் யாரையும் விட்டுவிடாது என்பது நிரூ பணமாகி இருக்கிறது." - என்றார்.


# குஜராத்தில் இன்று காலை நிலநடுக்கம்

குஜராத்தின் கட்ச் பகுதியில் இன்று காலை 8.00 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

15 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

குஜராத்தின் கட்ச் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் வலிமை ரிக்டர் அளவுகோலில் 4.1 ஆக பதிவாகியுள்ளது என இந்திய நிலநடுக்கவியல் தேசிய மையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், உயிர்ச்சேதம் அல்லது உடமைச் சேதங் கள் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.







# ரஷ்ய - உக்ரைன் இடையே போர்க்கைதிகள் பரிமாற்றம்

இரண்டு ஆண்டுகளை நெருங்கும் ரஷ்ய உக்ரைன் இடையேயான யுத்தத்தில் இருநாடுகளும் தற்போது போர்க்கைதிகளை பரிமாற்றம் செய்துள்ளன.

ரஷ்யாவுக்கு சீனா மற்றும் வட கொரியா ஆகியவை மறைமுகமாக ஆயுதங்கள் கொடுத்து வருகின்றன.

உக்ரைனுக்கு அமெரிக்கா தலைமையில் பிரிட்டன் மற்றும் பிற மேற்கத்தைய நாடுகள் ஆயுதங்களை வாரி வழங்குகின்றன.

இதனால், தற்போதுகூட மாறிமாறி தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் ரஷ்யாவின் போர் விமானம் போர்க்கைதிகளை ஏற்றிக் கொண்டு செல்லும்போது சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் ஆறு விமான ஊழியர்கள் மற்றும் மூன்று ரஷ்ய வீரர்கள் இருந்தனர் என கூறப்படுகிறது.

இந்த சர்ச்சை பெரிதாக வெடித்த நிலையில், போர்க்கைதிகளை மாற்றிக் கொள்ள இருதரப்பிலும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இந்தநிலையில் 195 போர்க்கைதிகள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டனர் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# காசா பகுதியில் மோதல் 3 இஸ்ரேல் வீரர்கள் பலி

காசா பகுதியில் பாலஸ்தீன எதிர்ப்புக் குழுக்களுடனான மோதலில் மேலும் மூன்று இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேலிய இராணுவம் நேற்று அறிவித்தது.

அத்துடன், தெற்கு காசாவில் மேலும் இரண்டு வீரர்கள் பலத்த காயம் அடைந்துள்ளனர் என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய உத்தியோகபூர்வ எண்ணிக்கையின்படி, ஒக்டோபர் 7 முதல் இஸ்ரேலிய வீரர்கள் மற்றும் அதிகாரிகள் 560 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒக்டோபர் 27 ஆம் திகதி காசாவில் தரைப்படை நடவடிக்கை தொடங்கியதில் இருந்து இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் மேலும் 223 பேர் உயிரிழந்தனர்.



எனினும், இஸ்ரேலிய படையினர் மீதான தாக்குதல்களில் அவர்கள் சந்தித்த இழப்பு, இந்த எண்ணிக்கையை விட மிகவும் அதிகம் என பாலஸ்தீனிய கிளர்ச்சி குழுக்கள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்க போர் விமானம் கடலில் வீழ்ந்தது

தென்கொரிய கடல் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க போர் விமானம் விபத்துக்குள்ளானது.

தென்கொரியாவின் வடக்கு ஜொயலா மாகாணம் ஜிக்டோ தீவு அருகே மேற்கு பசுபிக் கடல் பகுதியில் எப்.16 ரக அமெரிக்க போர் விமானம் இன்று வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

தென்கொரிய கடல் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க போர் விமானம் விபத்துக்குள்ளானது.

தென்கொரியாவின் வடக்கு ஜொயலா மாகாணம் ஜிக்டோ தீவு அருகே மேற்கு பசுபிக் கடல் பகுதியில் எப்.16 ரக அமெரிக்க போர் விமானம் இன்று வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.



விபத்துக்குள்ளான விமானத்தை இயக்கிய விமானி பாரசூட் மூலம் வெளியேறி உயிர் தப்பினார்.

இந்த விபத்து குறித்து அறிந்த தென்கொரிய கடற்படையினர் விரைந்து சென்று கடலில் விழுந்த விமானியை பத்திரமாக மீட்டனர்.



# பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மல்வான அல்-முபாரக் தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வாராந்த ஒன்றுகூடல் கல்லூரி அதிபர் எஸ்.எச்.எம்.நஹீம் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கான பழைய மாணவர் சங்க நிறைவேற்றுக்குழு தெரிவு உறுதிப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# கோரளைப்பற்றில் இரத்ததானம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

வாழைச்சேனை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் கோரளைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கோரளைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ஜெயாந்தி திருச்செல்வமும், அதிதிகளாக லயன்ஸ் கழக முன்னாள் தலைவர்களான கே.இராஜகோபால், கே.கணபதிப்பிள்ளை, சமூக மேம்பாட்டாளர் ஜோசப் சிவில்ராஜ் ஆகியோரரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதி உத்தியோத்தர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், பொலிஸ் உத்தியோஸ்தர்கள், குருதிக் கொடையாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 16 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா!

(அபு அலா )

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக ஒலுவில் வளாக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்று தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த இரண்டு நாள் நிகழ்வுகளும் தலா 3 அமர்வுகள் வீதம் மொத்தமாக 6 அமர்வுகளாக இடபெறவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முதலாவது நாளின் முதலாவது அமர்வில் கலை, கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 மாணவர்களும், இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடங்களைச் சேர்ந்த 355 மாணவர்களும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான, பொறியியல் மற்றும் தொழிநுட்ப பீடங்களைச் சேர்ந்த 430 மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை நான்காவது அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தைச் சேர்ந்த 314 மாணவர்களுக்கும் ஐந்தாவது அமர்வில் கலை, கலாசார பீடங்களைச் சேர்ந்த வெளிவாரிப் பட்டதாரிகள் 350 பேருக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. ஆறா வது அமர்வில் கலை, கலாசார மற்றும் முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த வெளிவாரி மற்றும் உள்வாரி பட்டதா ரிகளுக்குமாக மொத்தம் 2,152 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள் ளன.



# வணிகப் பேரவை - தேசிய மக்கள் சக்தி சந்திப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இலங்கை வணிகப் பேரவையின் பிரதிநிதிகள் குழுவினருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசா நாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தி யின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (31) இடம் பெற்றது.

இதன்போது பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் வணிகத்துறை எதிர் நோக்கியுள்ள சிக்கல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைத்தல் சம்பந்தமான தேசிய மக்கள் சக்தியின் கொள்கைரீதியான அணுகு முறைகள் பற்றி விரிவாக கலந்து ரையாடப்பட்டது.



இலங்கை வணிகப் பேரவையின் சார்பாக இந்த சந்திப்பில் அதன் தவி சாளர் ஏர்னஸ்ற் அன்ட் யங் நிறுவ னத்தின் உள்நாட்டு முகாமைத்துவ பங்காளி துமிந்த ஹுலங்கமுவ, ஸ்டேன்டர்ட் அன்ட் சார்ட்டட் வங்கியின் பிங்குமால் தெவரதன்திரீ, டயலொக் ஆசியாட்டாவின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் சுபுன் வீரசிங்க, அட் வகாட்டா நிறுவனத்தின் தலைவர் முட் டாசா ஜெபர்ஜி ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் கே.டி. லால்காந்த, தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி ஆகியோர் பங்கேற்றிருந் தனர்.

# சேதமடைந்த நிலையில் பாலையடி வாய்க்கால்!

( அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை விவசாய விரி வாக்கல் பிரிவுக்கு உட்பட்ட பாலயடி போட்டா , தொய்யம் வட்டை கீழ்க்கண்டம் மற்றும் மேற்கண்டம் ஆகிய சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படும் வடிச்சல் நீர் கிறவல் ஆற்றில் சேரு மிடத்திலுள்ள வாய்க்கால் சேதமடைந்து பல வருடங்களாகியும் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப் படுகிறது என்று பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.



இந்த வாய்க்கால் சேதமடைந்துள்ள தால் இதன் மேலான போடப்பட்டிருந்த கொங்கிறீட் பாலமும் இடிந்து விழுந்துள் ளது. இதனால் ஏனைய வயல்களுக்கு செல்லும் விவசாயிகளும் உழவு இயந் திரங்களும் சுற்றி வளைத்தே தமது வயல் நிலங்களுக்கு செல்ல வேண்டி யுள்ளது. அத்துடன் வாய்க்கால் ஆழமாகவுள் ளதால் இருபுறமும் உள்ள வயல் நிலங் கள் ஒவ்வொரு போகத்தின் போதும் இடிந்து விழுவதால் விவசாயிகள் பல விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வட்ட விதா னைகள் ஊடாக சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு பலமுறை தெரிவித்தும் இது வரை இவ்வாய்க்கால் திருத்த வேலை கள் இடம்பெறாமல் இருப்பது மிகவும் கவலையளிக்கிறது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.